**7.4.2015**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சீசனுக்கு தயாராகும் காட்டேரிப் பூங்கா

கோடை சீசனுக்காக குன்னூர் அருகே உள்ள காட்டேரிப் பூங்காவில் நான்கு நாடுகளைச் சேர்ந்த விதைகள் மூலம் நாற்றுகள் உருவாக்கப் பட்டு தற்போது பராமரிப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் ஏப்ரல், மே மாதங்களில் சீசன் தொடங்குவதால் நீலகிரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானவர்கள் குன்னூரில் உள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களைக் கண்டு ரசிக்க வருவர். இதற்காக குன்னூர் காட்டேரிப் பூங்காவில் அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி போன்ற வெளிநாடு களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மலர் விதைகள் மூலம் நாற்றுகள் உருவாக்கும் பணி கடந்த மாதம் நடைபெற்றது. இதில் அஸ்டோ, பிளாக்ஸ், ஆன்டினம், கிளாண்டிலா, அல்லிசம், ஸ்வீட் பீக்கோ உள்ளிட்ட மலர் நாற்றுகள் பூக்கும் தறுவாயில் இருப்பதால் இந்த சீசனுக்கு நீலகிரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பலவகையான பூக்களைப் பார்த்து ரசிக்கலாம் என்று தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ஆவினில் அடர்கொழுப்புப் பால் அறிமுகம்

வேலூர், திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் (ஆவின்) அடர்கொழுப்புப் பால் பாக்கெட் அறிமுக விழா திங்கள்கிழமை நடைபெற்றது. ஆவின் தலைவர் த.வேலழகன், பொது மேலாளர் நா.அருள்ஜோதி அரசன் ஆகியோர் இதை அறிமுகம்

செய்துவைத்தனர். "லிட்டர் ரூ.45 விலையில் இப்பால் அனைத்து ஆவின் முகவர்களிடமும் கிடைக்கும். இந்தப் பாலில் 6 சதவீதம் கொழுப்புச் சத்தும், 9 சதவீதம் இதர சத்துகளும் உள்ளன. ஒரு லிட்டர் பாக்கெட்டு களாக விநியோகம் செய்யப்படும்' என பொது மேலாளர் அருள்ஜோதி அரசன் தெரிவித்தார்.

## <u>கால்நடை மருத்துவப் பணியாளர்களுக்கான பயிற்சி கருத்தரங்கம் தொடக்கம்</u>

புதுக்கோட்டை மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், கால்நடைத்துறை மருத்துவப் பணியாளார்களுக்கான 4 நாள் கருத்தரங்கம் திங்கள்கிழமை தொடங்கியது. புதுக்கோட்டை சத்தியம் உணவக அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கை புதுக்கோட்டை மண்டல இணை இயக்குநர் மோகனரங்கன் தொடக்கி வைத்து பேசியது: கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக்கான கால்நடை மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கான கால்நடைகளை தாக்கும் நோய்கள் குறித்தும், அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் அறிந்து கொள்ளும் வகையில் அஸ்காட் திட்டத்தின் கீழ் மத்திய அரசு பங்களிப்புடன் இந்தப் பயிற்சி, கருத்தரங்கம் நடத்தப்படுகிறது என்றார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் பி.என். ரிச்சர்டு ஜெகதீசன் பேசுகையில், நோய்க் கிளர்ச்சி காலங்களில் தொற்று நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை குறித்தும், விலங்கிலிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்கள் குறித்தும் அதை கண்டுபிடிக்கும் வழிமுறைகள் குறித்தும் விளக்கமளித்தார். ஏப். 6 -ம் தேதி முதல் 9 -ம் தேதி வரை 4 நாள்கள் நடைபெறும் மூன்று அமர்வுகளில் கால்நடை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பங்கேற்று பயிற்சி அளிக்கின்றனர்.இதில் கால்நடை ஆய்வாளர்கள், ஆய்வக உடனாளர், ஆய்வக உதவியாளர் உள்பட 20 பேர் கலந்துகொண்டனர்.கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் சம்பத் வரவேற்றார்.

## முன்னோடி விவசாயிகள் 16 பேருக்கு நம்மாழ்வார் விருது

குத்தாலம் வட்டம், எலந்தங்குடியில் இயற்கே வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் பிறந்த நாள் இயற்கை உழவர் எழுச்சி தினமாக திங்கள்கிழமை கொண்டாடப்பட்டது. எலந்தங்குடியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த அங்கக வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிலக அரங்கத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு தமிழ் இயற்கை உழவர் இயக்கத்தின் மாநிலத் தலைவர் சிக்கல் அம்பலவாணன் தலைமை வகித்தார். பி.ஆர். பாண்டியன், முருகமங்கலம் சம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், இயற்கை வேளாண்மையில் கடந்த கால பணிகள் என்ற தலைப்பில் தமிழக இயற்கை உழவர் இயக்கத்தின் மாநிலச் செயலாளர் நெல் ஜெயராமன், இயற்கை வேளாண்மையில் எதிர்கால பணிகள் என்ற தலைப்பில் குடும்பம் அமைப்பின் துணை இயக்குநர் சுரேஷ்கண்ணா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இயற்கை முறையில் கால்நடை தீவனம், மண்புழு உரம், இயற்கை பூச்சிக்கொல்லிகள் மற்றும் இயற்கை விவசாயத்திற்கான விதைகள் தயாரித்த உள்ளிட்டவை தொடர்பாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டன. பயிலரங்கத்தில், நமது பாரம்பரிய நெல் ரகங்கள், அவற்றின் குண நலன்கள், புற்றுநோய் மற்றும் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் பாரம்பரிய நெல் ரகங்கள், குழந்தை களுக்கு ஏற்ற நெல் ரகங்கள், மாதவிடாய் காலங்களில் பெண்கள் உட்கொள்ள வேண்டிய நெல் ரகங்கள் உள்ளிட்ட அரிய வகை நெல் மாதிரிகள் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. பாரம்பரிய விதை நெல் மற்றும் இயற்கை வேளாண்மையில் விளைவிக்கப்பட்ட நெல் ரகங்களை உற்பத்தி செய்யும் தஞ்சை, திருவாரூர், காரைக்கால், புதுக்கோட்டை மற்றும் நாகை மாவட்ட முன்னோடி விவசாயிகள் 16 பேருக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்பட்டது. மேலும், கோடை சாகுபடிக்காக விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன. நீர்நிலை பாதுகாப்பு, விளைநிலங்கள் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மழைநீர் சேமிப்பு, வேளாண்மையில்

இளைஞர்களை ஈர்ப்பது குறித்து ஏப். 6 முதல் 12 வரை தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. சேதுராமன், ராமவேல், நாங்குநேரிஅசோகன், கதிராமங்கலம் ஸ்ரீராம், காரைமருத்துவர் உமாமகேஸ்வரி, பள்ளத்தூர் முருகையன், திருத்துறைப்பூண்டி கரிகாலன், நன்னிலம் சிங்காரம் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிலகத்தின் இயக்குநரும், நிர்வாக அறங்காவருமான அலீஸ்பாக் வரவேற்றார். தமிழக இயற்கை உழவர் இயக்க நிர்வாகி வரதராஜன் நன்றி கூறினார்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>மலர் சாகுபடியில் மகிழும் விவசாயிகள்</u>

அந்தியூர் : அந்தியூர் மற்றும் சுற்றுப்பகுதியில் முக்கிய தொழில் விவசாயமாகும். இப்பகுதியில் ஆறு மற்றும் வாய்க்கால் பாசனம், மிக குறைவு. கிணற்று நீர், மழை நீரை நம்பி விவசாயம் செய்கின்றனர். பருவமழையும் பொய்த்துப்போகும் நிலையில், நிலத்தடி நீரும், 1,000 அடியை தொட்டுவிட்டதால், கிடைக்கும் சொற்ப தண்ணீரை கொண்டு, பணப்பயிர்களான கரும்பு, மஞ்சள், நெல், பருத்தி, வாழை ஆகியவை சாகுபடி செய்ய முடிவதில்லை. எனவே குறைந்த நீரைக்கொண்டு கீரை, மற்றும் பூ வகைகள் சாகுபடி செய்து, விவசாயிகள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். மல்லிகை பூ சாகுபடி, ஒரு புறம் நடந்தாலும், கோழிக் கொண்டை பூ சாகுபடி செய்து, ஓரளவு லாபமும் பார்க்கின்றனர். அந்தியூர் அடுத்த ஓசபட்டி- புன்னம்பிடாரி என்ற இடத்தில், வெங்கடேசன் என்ற விவசாயி, தனக்கு சொந்தமான நிலத்தில் தண்ணீர் பற்றாக் குறையால், 25 செண்ட் அளவுக்கு மட்டும் கோழிக்கொண்டை பூ சாகுபடி செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் குடும்பம் நடத்தி

வறுகின்றார். தனது தோட்டத்தில் விளையும் கோழிக்கொண்டைப்பூவின் விதையை எடுத்து, நாற்று தயார் செய்து, நடவு செய்து, அதிக பட்சம், 90 நாளில் செடிகள் நன்கு வளர்ந்து பூ கொடுக்கிறது.ஐந்து நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டாலே போதுமானது. 25 செண்ட் நிலத்தில், வாரம் ஒரு முறை பூ பறிக்கும் போது, 30 முதல், 40 கிலோ வரை விø ளச்சல் கொடுக்கிறது. ஒரு கிலோ கோழிக்கொண்டை ப்பூ, 50 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்குவதால், வா ரம், 1,500 ரூபாய் சம்பாதிக்கு முடியும். எனவே சிறு விவசாயிகள், கோழிக்கொண்டை பூ சாகுபடி செய்து, பயன் பெறலாம், என, வெங்கடேசன் தெரிவித்தார்.

## தமிழக நதிகளை இணைத்தால்: குடகனாறு ஜீவநதியாகும்: வல்லுநர்குழு விவசாயி தகவல்

திண்டுக்கல்: "தமிழகத்தில் நதிநீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தப் பட்டால் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள குடகனாறு ஜீவநதியாக மாறும்', என காந்திகிராம பல்கலை கருத்தரங்கில் மாவட்ட விவசாயிகள் சங்க வல்லுனர்க்குழு உறுப்பினர் தர்மராஜ் தெரிவித்தார். காந்திகிராம பல்கலையில், நவீன நீர்வழிச்சாலை பேரியக்கம் சார்பில், விழிப்புணர்வு பிரசார பயண கருத்தரங்கு நடந்தது. பல்கலை துணைவேந்தர் நடராஜன் தலைமை வகித்தார். நவீன நீர்வழிச்சாலை பேரியக்க தலைவர் காமராஜ் பேசினார்.விவசாயிகள் சங்க வல்லுனர் குழு உறுப்பினர் தர்மராஜ் பேசியதாவது: கிராமங்கள் வளம் பெற்றால் நாடு வளமாகும். தமிழகத்தில் கிராமங்கள் வளம்பெற நதிகள் இணைய வேண்டும். வேடசந்தூர் குடகனாறு ஜீவநதியாக ஓடிக்கொண்டிருந்தது. தற்போது குண்டும் குழியுமாக, நதி இருக்கும் இடம் தெரியவில்லை. வறட்சி மிகுந்த மாவட்டம் திண்டுக்கல். ஆயிரத்து 400 குளங்கள் வறண்டு கிடக்கின்றன. நதிநீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தினால் குடகனாறு ஜீவநதியாகும். மக்களின் பங்களிப்பு இல்லாமல் எந்த திட்டமும் நிறைவேறாது. மாணவ-

மாணவிகள் இத்திட்டத்தில் பங்கேற்க முன்வர வேண்டும். உலகநாடு களில் 70 சதவீத மக்கள் விவசாயிகளாக உள்ள நாடு இந்தியா. அவர்களுக்கான தனி பட்ஜெட் அமைத்து வெளியிட வேண்டும், என்றார்.

## வேளாண்மை படித்தால் வங்கியிலும் வேலைவாய்ப்பு: ஆலோசகர் சுதாகர் தகவல்

திண்டுக்கல்: "பி.எஸ்சி., வேளாண் மை படிப்போருக்கு வங்கியிலும் வேலைவாய்ப்பு உள்ளது," என கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை மாணவர் சேர்க்கை ஒருங்கிணைப்பாளர் சுதாகர் தெரிவித்தார். திண்டுக்கல்லில் தினமலர் சார்பில் நடந்த வழிகாட்டி நிகழ்ச்சியில் "வேளாண்மை படிப்புகளின் எதிர்காலம்' குறித்து அவர் பேசியதாவது: மக்கள் தொகை பெருகுகிறது. விவசாய பரப்பு குறைந்து கொண்டே செல்கிறது. தேவைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்கும் காலக்கட்டத்தில் இருக்கிறோம். இதனால் வேளாண் மை படிப்புகளுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. வேளாண்மையில் 3 தொழில்நுட்ப படிப்புகள் (பி.டெக்.,) உட்பட 13 வகை இளங்கலை படிப்புகள் உள்ளன. அனைத்து படிப்புகளும் 4 ஆண்டுகள் தான். பிளஸ் 2 ல் கணிதம், உயிரியல் பாடப்பிரிவை எடுத்தவர்கள் 13 படிப்புகளிலும் சேரமுடியும். தாவரவியல், விலங்கியல் படித்தவர்கள் பி.டெக்., தவிர்த்து மற்ற 10 வகை படிப்புகளில் சேரலாம். இளங்கலை படிக்கும்போதே கனடா சென்று மற்றொரு பட்டப்படிப்பு படிக்கலாம். வேளாண்மை படிப்பு முடித்தவர்களுக்கு வேளாண்மைத்துறை, வங்கிகளில் வேலைவாய்ப்புகள் உள்ளன. வேளாண்மை படிப்பு முடித்தவர்கள் "சிவில் சர்வீஸ்' தேர்வில் எளிதில் வெற்றி பெற முடியும். பி.எஸ்சி., வனவியல் முடித்த 128 பேர் ஐ.எப்.எஸ்., அதிகாரிகளாகி உள்ளனர், என்றார்.

## கால்நடை படிப்பில் பெண்கள் ஆர்வம்

"கால்நடை மருத்துவப்படிப்பின் எதிர்காலம்' குறித்து திருப்பரங்குன்றம் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி, ஆராய்ச்சி மையத்தலைவர் டாக்டர் பண்ணை முருகானந்தம் பேசியதாவது: மாதவரம் கால்நடை மருத்துவ பல்கலை, நாமக்கல், ஒரத்தநாடு, நெல்லை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவ கல்லூரிகள் உள்ளன. சமீபகாலமாக கால்நடை படிப்பில் ஆர்வம் அதிகரித்துள்ளதால் 280 இடங்களுக்கு 20 ஆயிரம் விண்ணப்பங்கள் வருகின்றன. இந்த படிப்பில் பெண்களும் ஆர்வம் காட்டுகின்றனர். பி.டெக்.,ல் உணவுதொழில்நுட்பம், பால்வளம், கோழி வளர்ப்பு ஆகிய படிப்புகள் உள்ளன. 2013 வரை முடித்தவர்களுக்கு அரசு வேலை கிடைத்துள்ளது. தனியார் பால்பண்ணை, மருத்துவமனை களிலும் வேலைவாய்ப்பு உள்ளது. "மாஸ்டர் டிகிரி,' முனைவர் பட்டம் பெறுவோர் கால்நடை மருத்துவ கல்லூரியில் உதவி பேராசிரியராக சேரலாம், என்றார்.

## இறவை சாகுபடியில் எள் பயிர் செழிப்பு

தியாகதுருகம்: இறவையில் சாகுபடி செய்துள்ள எள் செடிகள் செழித்து வளர்ந்துள்ளதால் தியாகதுருகம் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பருவமழை தொடர்ந்து 3 ஆண்டுகளாக ஏமாற்றியதால் தியாகதுருகம் பகுதியில் கடும் வறட்சி நிலவுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக மணிமுக்தா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படவில்லை. கிராமங்களில் உள்ள ஏரி,குளங்கள் தண்ணீர் இன்றி வறண்டு கிடப்பதால் நீர்வளம் குறைந்து விவசாயம் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது. நன்செய் பயிர்களை சாகுபடி செய்யமுடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். இதனால் கோடை கால பயிர்களான வேர்கடலை, எள், கேழ்வரகு ஆகியவற்றின் பரப்பு ஆண்டு தோறும் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால் கிணற்று நீர் பாசனத்தை நம்பி சாகுபடி செய்யப்படும் கோடை கால பயிர்களை காப்பாற்ற கடும் சிரமப்பட

வேண்டியுள்ளது. இதன் காரணமாக நல்ல பலன் கொடுக்கும் எள் பயிரை தியாகதுருகம் பகுதியில் குறைந்த பரப்பில் மட்டுமே தற்போது சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாத துவக்கத்தில் விதைத்த எள் பயிர்கள் தற்போது பூக்கும் பருவத்தில் உள்ளது. செடிகளில் அதிக எண்ணிக்கை யில் பூக்கள், பிஞ்சு களுடன் செழித்து வளர்ந்துள்ளதால் கூடுதல் லாபம் கிடைக்கும் என்று விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தண்ணீர் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் குறைந்த பரப்பில் பயிரிட்டுள்ளதால் சிக்கல் இன்றி நீர் பாய்ச்சி பலன் ஈட்ட முடியும் என்று விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

## <u>அதிசய தென்னை மரத்தில் கொத்து கொத்தாக காய்கள்</u>

பெரம்பலூர் : பெரம்பலூர் அருகே, கொத்துக் கொத்தாக காய்கள் காய்த்து குலுங்கும் அதிசய தென்னை மரத்தை, பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தாலுகா, புதுவேட்டக்குடி கிராமத்தை சேர்ந்தவர் வேலாயுதம், 37. விவசாயியான இவர், ஐந்து ஆண்டுகளுக்கு முன், ஆந்திர மாநிலத்தில் இருந்து, தென்னை மரக்கன்று ஒன்றை வாங்கி வந்து, வீட்டின் முன் நட்டு வளர்த்து வந்தார். கடந்த, ஐந்து மாதங்களுக்கு முன், தென்னை மரம் முழுவதும் பாளைகள் உருவானது. பாளைகள் வெடித்து, அதிலிருந்து, 5,000க்கும் மேற்பட்ட பூக்கள் காயாக மாறின. தென்னை மரத்தில், இயற்கைக்கு மாறாக கொத்துக் கொத்தாக காய்கள் காய்த்து குலுங்குகின்றன. இந்த தென்னை மரத்தில் சிறிய அளவிலான இளநீரில், 250 மில்லி லிட்டர் தண்ணீர் உள்ளது. தேங்காயை உடைத்தால், மட்டை குறைவாகவும், ஓடு மெல்லிதாகவும், பருப்பு தடிமனாகவும் உள்ளது. அதிசய தென்னை மரம் பற்றி தகவல் அறிந்த சுற்றுப்பகுதி மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

## முட்டை விலை 261 காசாக நிர்ணயம்

நாமக்கல் : தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 261 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 255 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஆறு காசு உயர்த்தி, 261 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 285, ஹைதராபாத், 233, விஜயவாடா, 242, பர்வாலா, 239, மும்பை, 270, மைசூர், 280, பெங்களூரு, 275, கோல்கத்தா, 282, டில்லி, 255.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## ரூ.1.60 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம் : ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில், 1.60 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 10 ஆயிரத்து, 183 மூட்டை பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 5,009, குறைந்த பட்சம், 3,899 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,579, குறைந்த பட்சம், 3,786 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம் பருத்தி மூட்டைகளும், 1.60 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. திருச்செங்கோடு,

அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர், கொங்கணாபுரம் ஆகிய பகுதியை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று பருத்தி மூட்டைகளை ஏலம் எடுத்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டோல்கேட் உழவர்சந்தையில் ரூ.5 லட்சத்தில் புதிதாக 25 தரை கடைகளுக்கான பணிகள் தொடக்கம்**

வேலூர், :வேலூர் டோல்கேட் உழவர்சந்தையில் ரூ.5 லட்சத்தில் புதிதாக 25 தரை கடைகளுக்கான பணிகள் தொடங்கப்படவுள்ளது.வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட டோல்கேட், காகிதப்பட்டறை, காட்பாடி பகுதிகளில் கடந்த திமுக ஆட்சியின் போது உழவர்சந்தை அமைக்கப்பட்டது. இந்த உழவர்சந்தையில் வேலூர், கணியம்பாடி, அணைக் கட்டு, ஊசூர், சோழவரம் உள்ளிட்ட பகுதிகளில் விளையும் கத்தரி, தக்காளி, மிளகாய் உள்ளிட்ட காய்கறிகளை விவசாயிகள் உழவர்சந்தையில் எடுத்துவந்து விற்பனை செய்துவருகின்றனர். தற்போது சுமார் 50க்கும் மேற்பட்ட தரை கடைகள் இயங்கி வருகிறது. மேலும் சிலர் தரை கடைகள் இல்லாமல் கொளுத்தும் வெயிலிலும், மழையிலும் விற்பனை செய்து வந்தனர். கூடுதல் தரை கடைகள் கட்ட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.இந்நிலையில் உழவர்சந்தையில் ரூ.5 லட்சத்தில் 5 இடங்களில் புதிதாக 25 தரை கடைகளுக்கான கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப் பட்டு பயன்பாட்டிற்கு வரும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.வேலூர் டோல்கேட்டில் உள்ள உழவர்சந்தையில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் தரை கடைகள் கட்டும் பணி நடந்து வருகிறது.

## வரத்து குறைந்ததால் தக்காளி விலை உயர்வு

அரூர், : அரூரில் வரத்து குறைந்ததால், தக்காளி விலை அதிகரித்துள்ளது. தர்மபுரி மாவட்டம், அரூர், கோபிநாதம்பட்டி கூட்ரோடு, பொம்மிடி, மொரப்பூர், கம்பைநல்லூர், இருமத்தூர், ஒடசல்பட்டி கூட்ரோடு உள்ளிட்ட இடங்களில் 20க்கும் மேற் பட்ட தக்காளி மண்டிகள் செயல்பட்டு வருகிறது. இங்கு விவசாயிகளிடம் இருந்து தக்காளி கொள் முதல் செய்து பெட்டிகளில் அடுக்கி சென்னை, பெங் களூர், கோவை, பாண்டி சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு வியாபாரிகள் விற்பனைக்கு அனுப்புகின்றனர். கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு 25 கிலோ கொண்ட ஒரு கூடை ரூ100 முதல் ரூ110 வரை விற்பனையானது. தற்போது ஒரு கூடை தக்காளி ரூ150 முதல் ரூ190 வரை மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு சில்லரையில் கிலோ ரூ7 முதல் ரூ9 வரை விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி வரத்து குறைந்ததால், விலை அதிகரித்து வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பால் உற்பத்தியாளர்களுக்கு மானியத்துடன் பசுந்தீவனம்

போச்சம்பள்ளி, : மத்தூர் ஒன்றியத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு மானியத்துடன் பசுந்தீவன விதைகள் வழங்கப்பட்டது.மத்தூர் ஒன்றியத்தில், பால் உற்பத்தியாளர்களுக்கு மானியத்துடன் கூடிய பசுந்தீவன விதைகள் வழங்கும் விழா, ஆனந்தூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆவின் பொதுமேலாளர் செல்வகுமார் தலைமை தாங்கினார். உதவி பொது மேலாளர் நாகராஜன் முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்க தலைவர் சேகர் வரவேற்றார். விழாவில் 75 சதவீத மானியத்துடன் கூடிய, பசுந்தீவன விதைகள் 4 கிலோ வீதம் 130 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. தர்மபுரி மாவட்ட, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய தலைவர் தென்னரசு விதைகளை வழங்கிப் பேசியதாவது: பால் கூட்டுறவு சங்கங்களில்,

பாலின் தரத்தை பரிசோதிக்க நவீன உபகாரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் சில நிமிடங்களில் தங்களின் பாலின் தரம், கொழுப்பு அளவு, விலை போன்றவற்றை தெரிந்துகொள்ளும் விதத்தில் நவீன இயந்திரம் விரைவில் அனைத்து பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் வழங்கப்படும். பால் உற்பத்தியாளர் களுக்கு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை பணப்பட்டுவாடா செய்யப்படுவதால், தனியார் துறைக்கு சென்று பால்உற்பத்தியாளர்கள் ஏமாறவேண்டாம். இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து பால் தரத் தினை கண்டறிய உதவும் கருவியை இயக்கி காட்டி விளக்கம் அளிக்கப்பட்டது. விழாவில் தாதம்பட்டி சங்க தலைவர் ரமணி செயலாளர்கள் சேகர், சென்றாயன் உள்பட பொதுமக்களும், விவசாயிகளும் கலந்து கொண் டனர். துணை மேலாளர் சேகர் நன்றி கூறினார்.

## ஆத்தூரில் 1200 மூட்டை மஞ்சள் ரூ70 லட்சத்திற்கு ஏலம்

ஆத்தூர், : ஆத்தூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 1200 மூட்டை மஞ்சள் ரூ70 லட்சத்திற்கு விற்பனையானது. சேலம் மாவட்டம் ஆத்தூரில் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுவது வழக்கம். இந்த ஏலத்தில் சேலம், விழுப்புரம், பெரம்பலூர், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். ஏலத்தில் சேலம், ஈரோடு, கோவை. திண்டுக்கல் உள்ளிட்ட ஊர்களிலிருந்து வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்கின்றனர். நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத்தில், 1200 மூட்டை மஞ்சள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. விரலி ரக மஞ்சள் குவிண்டால் ரூ6,355 முதல் ரூ11 ஆயிரம் வரையும், உருண்டை ரகம் குவிண்டால் ரூ5,355 முதல் ரூ8,550 வரையும், பனங்காளி ரகம் குவிண்டால் ரூ13,885 முதல் ரூ22 ஆயிரம் வரையும்

ஏலம் போனது. மொத்தம் 1200 மூட்டை மஞ்சள் ரூ70 லட்சத்திற்கு விற்பனையானது.

**துறையூரில் 8ம் தேதி பருத்தி ஏலம் விவசாயிகளுக்கு அழைப்பு**

திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக பருத்தி ஏலம் 8ம் தேதி நடை பெறுவதால் விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்தாண்டு முதல் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளதால் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை தோறும் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. அதன்படி, மறைமுக பருத்தி ஏலம் வரும் 8ம் தேதி (புதன்) காலையில் நடக்கிறது. இதில் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள் வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்று பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**வேளாண் பெருக்கு திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 6,360 டன் விதை கொள்முதல்**

தஞ்சை, : வேளாண் பெருக்கு திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 6,3 60 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு 1,57,760 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.தஞ்சை நாஞ்சிக் கோட்டை சாலையில் உள்ள உழவர் மையத்தில் வேளா ண்மை பொறியியல் துறை சார்பில் வேளா ண்மை இயந்திரமயமாக்குதல் வாடகை திட்டம் தொடக்க விழா நடந்தது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகித் தார். விழா வை துவக்கி வைத்து அமை ச்சர் வைத்திலிங்கம் பேசியதாவது: திருந்திய நெல் சாகுபடியில் விவசாயிகள் நல்ல லாபம் அடையலாம். குறைவான தண்ணீரில் புதிய தொழில் நுட்பங்களை கடைபிடித்து அதிக விளைச்சல் பெறலாம்.

வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலை துறைகள் இணைந்து மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கிராம பகுதிகளுக்கு சென்று விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்களை எடுத்து சொல்ல வேண்டும். பல்வேறு புதிய திட்டங்களையும் 100 சதவீதம் விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் வேளாண் பெருக்கு திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 6,360 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு 1,57,760 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2012- 13ம் ஆண்டில் 71,528 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.17.32 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்று பல்வேறு திட்டங்கள் விவசாயிகள் நலன்கருதி நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுபோன்ற திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்தி கொண்டு வாழ்க்கையில் முன்னேற்ற அடைய வேண்டும் என்றார். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தலைவர் தங்கமுத்து, எம்எல்ஏக்கள் ரங்கசாமி, ரத்தினசாமி, துரைக்கண்ணு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி

பாபநாசம், : அய்யம்பேட்டை அடுத்த சூலமங்கலம், மெலட்டூரில் பாபநாசம் விவேகானந்தா தொண்டு நிறுவனத்தை சேர்ந்த வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மையம், தஞ்சாவூர் நபார்டு வங்கி சார்பில் உளுந்து மற்றும் பச்சைப்பயிரில் தரமான விதை உற்பத்தி தொழிற்நுட்ப பயிற்சி நடந்தது. திட்ட அலுவலர் வேல்முருகன் பயிற்சி அளித்தார். இதில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை களப்பணியாளர்கள் லீமா ரோஸ், லட்சுமி, பிரகதாம்பாள் செய்திருந்தனர்.

<u>**வனாமி இறால் வளர்ப்பில் அறிவியல் சார்ந்த தொழில்நுட்ப முறையை பின்பற்ற வேண்டும் பண்ணையாளர்களுக்கு யோசனை**</u>

நாகை, : வனாமி இறால் வளர்ப்பு பண்ணையாளர்கள் அறிவியல் சார்ந்த இறால் வளர்ப்பு முறையை பின்பற்றினால் அதிக லாபம் பெறலாம். இதுகுறித்து நாகை மீன்வள தொழில்நுட்ப நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் வனாமி இறால் வளர்ப்பு தீவிரமாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு இருப்பு வைக்கப்பட்ட வனாமி இறால்கள் வெண்புள்ளி வைரஸ் தாக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்டன. இத்தகைய சூழலில் இறால் பண்ணையாளர்கள் வனாமி இறால் இருப்பு செய்வதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய எச்சரிக்கை நடவடிக்கைகள் வருமாறு குளத்தை நன்கு வெடிப்பு வரும் வரை காய விட வேண்டும். பின்னர் குளத்தில் உள்ள அடி மண்ணை 1 முதல் 2 அங்குலம் வரை அகற்றி விட வேண்டும். குளத்தில் நீர் ஏற்றும் முன் நண்டு வலை மற்றும் பறவை வலை இருந்தால் அகற்றி விட வேண்டும். கால்வாயில் இருந்து நீர் ஏற்றப்படும் குழாயில் 40 முதல் 60 மைக்ரான் வடிப்பான்களை கட்டி நீரை குளத்தில் ஏற்ற வேண்டும். வனாமி இறால் குஞ்சுகளை தேர்வு செய்யும் போது வெண்புள்ளி வைரஸ் சோதனை செய்த பிறகே இருப்பு செய்ய வேண்டும். குளத்தில் நீர் ஏற்றிய பிறகு பிளீச்சிங் இட வேண்டும்.

வனாமி இறால்களை 20-40 சதுரமீட்டர் என்ற இருப்பு அடர்த்தியில் இருப்பு செய்வது நல்லது. அதிக இருப்பு அடர்த்தி இறால் வளர்ப்பு குளத்தின் மேலாண்மையை கடினமாக்கி விடும். வாரம் ஒரு முறை நீர் பரிசோதனை செய்து தேவைக்கு ஏற்ப தொழில் நுட்ப ஆலோசகரின் அறிவுரைப்படி, குளத்தில் இடு பொருட்களான பினரல்ஸ், நன்மை பயக்கும் நீர் மற்றும் மண் பாக்டீரியாக்களை இட வேண்டும். தேவைக்கு அதிகமாக மினரல்களை இடுவதை தவிர்க்க வேண்டும். சரியான அளவில் உணவு இட வேண்டும். அறிவியல் சார்ந்த இறால் வளர்ப்பு முறையை பின்பற்றி தொழில் நுட்ப ஆலோசகரின் ஆலோசனை படி இறால்

வளர்த்தால் இறால் பண்ணையாளர்கள் நல்ல லாபத்தை அடையலாம். மேலும் விவரங்களுக்கு இயக்குனர், மீன்வள தொழில்நுட்ப நிலையம், தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம், நாகை என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04365 240441 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டோ அறியலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயறு வகைகளுக்கு 50% மானியம்

பழநி, : பயறு வகைகளுக்கு 50% மானியம் வழங்கப்படுமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.பழநி வட்டாரத்தில் பயறு வகைகளான உளுந்து, தட்டை, பாசிப்பயிறு மற்றும் நிலக்கடலை ஆகியவற்றிற்கு அதன் விலையில் 50% மானியமாக வழங்கப்படுகிறது. அதுபோல் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் ஆயக்கட்டு விவசாயிகளுக்கு மக்காச்சோளம், சோளம், ஜிப்சம், நுண் ஊட்டங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட உள்ளன. இதனை பெற விரும்பும் ஆயக்கட்டு விவசாயிகள் சிட்டா, 2 புகைப்படங்கள், குடும்ப அட்டை ஆகியவற்றுடன் அருகில் உள்ள வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோயம்பேடு மார்க்கெட்டில் சாத்துக்குடி விற்பனை அமோகம் ஒரு கிலோ 30 ரூபாய்



சென்னை, சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் சாத்துக்குடி விற்பனை அமோகமாக நடைபெறுகிறது. ஒரு கிலோ சாத்துக்குடி 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

<u>புதிது புதிதாக...</u>

தமிழகம் முழுவதும் கோடை காலம் தொடங்கி உள்ள நிலையில், சென்னையில் வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளது. கோடை வெயிலின் தாக்கத்தை தொடர்ந்து, சென்னையில் ஆங்காங்கே சாத்துக்குடி மற்றும் கிர்ணிப்பழ ஜூஸ் கடைகள், கரும்புச்சாறு கடைகள், தர்பூசணி பழக்கடைகள் புதிது புதிதாக முளைத்துள்ளன. இது ஒருபுறம் இருக்க, சென்னை கோயம்பேட்டில் சாத்துக்குடி விற்பனையும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. இது குறித்து சென்னை கோயம்பேடு பழ வியாபாரிகள் சங்க தலைவர் ஸ்ரீனிவாசன் கூறியதாவது:–

<u>சராசரி 100 டன்</u>

கோடை வெயில் தொடங்கி உள்ள நிலையில், சாத்துக்குடி பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. தினசரி சராசரியாக 100 டன் சாத்துக்குடி பழங்கள் கோயம்பேடு மார்க்கெட்டிற்கு வருகின்றன. சாத்துக்குடி விற்பனையும் விறுவிறுப்பாக நடைபெறுகிறது. தற்போது, கோடை பழங்களான கிர்ணிப்பழம், திராட்சை, கமலா ஆரஞ்சு மற்றும் தர்பூசணி விற்பனையும் அமோகமாக நடைபெறுகிறது. இன்னும் ஓரிரு வாரங் களில் கிர்ணிப்பழம் மற்றும் திராட்சை பழத்தின் வரத்து குறைந்துவிடும்.

<u>சுவை அதிகரிக்கும்</u>

அதைத் தொடர்ந்து, சாத்துக்குடியின் விற்பனை அதிகரிக்கும், வரத்து அதிகரிக்கும், விலையும் அதிகரிக்கும். தற்போது ஒரு கிலோ சாத்துக்குடி 25 முதல் 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெயிலின் தாக்கம் அதிகரிக்க, அதிகரிக்க சாத்துக்குடியை மக்கள் அதிக அளவில் வாங்குவார்கள். இதனால், தேவை அதிகரிக்கும். எனினும், விலையும் தற்போது இருப்பதைவிட சற்று அதிகரிக்கும். முதலில் வரும் சாத்துக்குடி

பழங்களை விட, இனி வரும் பழங்களின் புளிப்பு சுவை குறைந்து, இனிப்பு சுவை அதிகமாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## நெரிஞ்சிப்பேட்டை பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழா



அம்மாபேட்டை, அம்மாபேட்டை அருகே உள்ள நெரிஞ்சிப்பேட்டை பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம் ஊக்கத்தொகை வழங்கும் விழா பால் உற்பத்தியாளர்கள் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன்னாள் எம்.பி. என்.ஆர்.கோவிந்தராஜர் தலைமை தாங்கி பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.2 லட்சத்து 60 ஆயிரத்து 818–யை வழங்கினார். அதைத்தொடர்ந்து சங்கத்தில் பணியின்போது இறந்து போன பணியாளர் ராஜாவின் குடும்பத்துக்கு சேம நல நிதியாக ரூ.53 ஆயிரத்துக்கான காசோலையை வழங்கினார். நிகழ்ச்சிக்கு துணை தலைவர் ராவுத்தம்மாள், அண்ணா தொழிற்சங்கத்தலைவர் பூபதி, துரைசாமி, பழனிச்சாமி, இயக்குநர்கள், கூட்டுறவு சங்க பணியாளர்கள், உறுப்பினர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக பால் உற்பத்தியாளர் சங்கத்தலைவர் எஸ்.எஸ். மாரியப்பன் வரவேற்று பேசினார். முடிவில் கூட்டுறவு சங்க செயலாளர் கிருஷ்ணன் நன்றி கூறினார்.

## இதுவரை 2,305 டன் நெல் கொள்முதல் கலெக்டர் ரவிகுமார் தகவல்



தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 2 ஆயிரத்து 305 டன் நெல் கொள் முதல் செய்யப்பட்டு உள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் நேற்று காலை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கூறியதாவது:–

நெல்கொள்முதல்

தூத்துக்குடி மாவட்டத்தில் நெல்கொள்முதல் நிலையங்கள் 7 இடங்களில் அமைக்கப்பட்டு உள்ளன. இதில் இதுவரை 2 ஆயிரத்து 305 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது. இதற்காக ரூ.3 கோடியே 48 லட்சம் பணம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான பணம் கையிருப்பு வைக்கப்பட்டு உள்ளது. உடனுக்குடன் விவசாயிகளுக்கு பணம் வழங்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் குறைந்த சாகுபடி உள்ள பகுதிகளில் உள்ள நெல்லை கொள்முதல் செய்வதற்காக தேவையின் அடிப்படையில் நடமாடும் நெல் கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டு உள்ளது. இந்த நடமாடும் கொள்முதல் நிலையம் மூலம் சுமார் 48 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளை விட தற்போது சாகுபடிஅதிகரித்துஇருக்கிறது.

துவரம்பருப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த மாதம் துவரம்பருப்பு 336 டன் தேவைப்பட்டது. இதில் 60 டன் வினியோகம் செய்யப்பட்டது. இந்த மாதம் 5 நாட்களில் 120 டன் துவரம்பருப்பு வினியோகம் செய்யப்பட்டு

இருக்கிறது. இந்த மாதம் முழுமையாக வினியோகம் செய்யப்படும். இதே போன்று 105 டன் உளுந்து தேவை. அதனை பெற்று முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சர்க்கரை, அரிசி, பாமாயில் சீராக வினியோகம் செய்யப்படுகிறது. ஸ்ரீவைகுண்டம் அணையை தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும். ஆய்வு பணி நடந்து உள்ளது. அதே போன்று அனுமதி பெறுவதற்கான நடவடிக்கையும் தீவிரமாக நடந்து வருகிறது. இவ்வாறு கலெக்டர் ம.ரவிகுமார் கூறினார்.

சான்றிதழ்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் சுயமாக தொழில் புரிந்திட பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதில் பயிற்சி முடித்த 27 பேருக்கு சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் வழங்கினார். அப்போது மகளிர் திட்டம் திட்ட இயக்குனர் இந்துபாலா உடன் இருந்தார்.

## நடவு துவரையில் விவசாயி சாதனை



நடவு துவரை சாகுபடி செய்து விவசாயி சாதனை படைத்தார்.

நடவுதுவரை

கீழப்பாவூர் வட்டாரம் பெத்தநாடார்பட்டியைச் சேர்ந்தவர் ஆசீர்ராஜ். அவர் நடவு துவரையில் நல்ல மகசூல் பெற்று சாதனை படைத்துள்ளார். இந்த சாதனை குறித்து விவசாயி ஆசீர்ராஜ் கூறியதாவது:–

வேளாண்மையில் புதிய தொழில்நுட்பமான பாலித்தீன் பைகளில் துவரை நாற்று வளர்த்து நடவு செய்ய வேளாண்மை துறையினர் என்னை அணுகினர். அவர்களின் வழிகாட்டுதலின்படி துவரை நாற்று நடவு ஒரு

எக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய விருப்பம் தெரிவித்தேன். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு எக்டேருக்கு தேவையான துவரை நடவு செய்ய கோ.ஆர்.ஜி.–7 விதை, பாலித்தீன் பை மற்றும் இடுபொருட்கள் வழங்கி நாற்று தயாரிக்க சொல்லிக் கொடுத்தனர். அதன்படிநாற்றுதயாரித்தேன்.

அதிகாரிகள்ஆலோசனை

வேளாண்மைத்துறை அலுவலர்கள் தெரிவித்தபடி 30 நாட்கள் கழித்து 5 ஙீ3 இடைவெளியில் குழிகள் எடுத்து அதில் துவரை நாற்றுகளை நடவு செய்தேன். நடவு செய்த பின் எனது தோட்டத்துக்கு உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் தொடர்ந்து வந்து செடியை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினர். அதன்படி தொழில்நுட்பங்களை கடைபிடித்து பயிரினை நல்ல முறையில் பராமரித்து வந்தேன். காய்கள் நன்கு முற்றிய நிலையில் வேளாண்மை உதவி இயக்குனர்கள் முன்னிலையில் சில செடிகளில் எத்தனை காய்கள் உள்ளன. எத்தனை கிளைகள் உள்ளன என கணக்கிட்டு பார்த்த போது, சராசரியாக 12 முதல் 15 கிளைகளும், 620 முதல் 825 காய்களும் இருந்தது.

அதிகலாபம்

நன்கு முற்றிய துவரை காய்களை முதலில் பறித்து விட்டு பின்பு மீதமுள்ள நெற்றுகளை செடியுடன் அறுவடை செய்து காய வைத்து காய்களை அடித்து உலர்த்தி தானியத்தை பிரித்து எடுத்தேன். நான் எதிர்பார்த்ததை விட, 1,728 கிலோ அதிகமாக மகசூல் வந்துள்ளது. இது சாதாரணமாக சாகுபடி செய்யும் நேரடி விதைப்பினை விட எக்டேருக்கு சுமார் 750 கிலோ கூடுதல் மகசூல் கொடுத்துள்ளது. தற்போது வெளி மார்க்கெட்டில் கிலோ ஒன்றுக்கு சராசரியாக ரூ.55 என்ற அளவில் ரூ.95 ஆயிரம் மொத்த வருமானம் கிடைத்தது. எனது துவரை சாகுபடி செலவில் விதை, உயிர் உரம், பூச்சி மருந்து, நுண்ணூட்ட உரம், இடுபொருட்கள் அனைத்தும் வேளாண்மைத்துறை மூலம் மானியமாக ரூ.6 ஆயிரத்து 500–க்கு

பெற்றேன். மேலும் ரொக்கமாக ரூ.1000–ம் வேளாண்மைத்துறை மூலம் பெற உள்ளேன். எனது சாகுபடி செலவு போக நிகர லாபமாக ரூ.50 ஆயிரம் கிடைத்துள்ளது. எனது தோட்டத்தில் துவரை நடவு முறையில் முதல் முறையாக பயிர் சாகுபடி செய்ததில் எனக்கு இவ்வளவு நல்ல மகசூல் கிடைத்ததை பார்த்து அருகில் உள்ள விவசாயிகள் ஆச்சரியமடைந்துள்ளனர். அவர்களும் வரும் பருவத்தில் நடவு துவரை சாகுபடி செய்ய உள்ளனர் என்று முன்னோடி விவசாயி ஆசீர்ராஜ் கூறினார். எனவே விவசாயிகள் வரும் பருவங்களில் நீர் ஆதாரங்கள் உள்ள இடங்களில் துவரை நாற்று விட்டு நடவு செய்து அதன்மூலம் நல்ல மகசூல் பெற்றிடுமாறு நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.